திரு நி.அன்பழகன்: தலைவர் அவர்களே, பெரிய பேருந்துகளை கிராமப்பகுதிகளிலே விடுகிற போது லாபம் வருமா நட்டம் வருமா என்று கணக்குப் பார்த்து விடப்படுகிறது. ஆனால் பேருந்து வசதிகள் இல்லாத கிராமங்களிலே இழப்பை ஓரளவிற்குக் குறைக்கிற வகையில் மினி பஸ்களை விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு சு.முத்துசாமி: லாபம் இருக்கிறதா நட்டம் இருக்கிறதா என்று ஆராய்வது உண்மைதான். பேருந்துகள் இல்லாத கிராமங்களிலே இவைகளையெல்லாம் பார்க்காமல் விட்டுக் கொண்டு இருக்கிறோம். நட்டத்தைக் குறைக்கிற அளவுக்குத்தான் மினி பஸ்களை விடமுடியும். அந்த ஏற்பாட்டைத்தான் அரசு செய்து கொண்டிருக்கிறது.

பாம்கோலா யூனிட்டிற்கான அரசு மானியம்

*வினா எண் 99—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு கதர் மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாம்கோலா யூனிட்டிற்கு அரசு அளித்து வந்த மானிய தொகை நிறுத்தப்பட்டது உண்மையா?

(ஆ) ஆம் என்றால் அதன் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு எஸ். என். இராசேந்திரன்; (அ) மற்றும் (ஆ): தமிழகத்தில் தற்போது செயல்பட்டு வரும் 8 பாம்கோலா யூனிட்டுகளில் தர்மபுரி மாவட்டம் மத்தூரிலுள்ள பனைப் பொருள் திட்டத்தில் செயல்பட்டு வரும் ஒரு பாம்கோலா யூனிட்டிற்காக மட்டும் வறட்சிக்குட்பட்ட பகுதிகள் திட்டத்தின் கீழ் ரூ.1.34 இலட்சம் மானியம் வழங்கப்பட்டது. அதன் மானியம் யூனிட் ஆரம்பித்து ஓராண்டு செயல்படுத்துவதற்காக அனுமதிக்கப்பட்டதாகும். அம்மானியம் அடுத்தடுத்த ஆண்டுகளுக்கு வழங்கப்படுவதில்லை. இம் மானியம் தவிர மற்ற பாம்கோலா யூனிட்டுகளுக்கு, மானியம் ஏதும் வழங்கப்படவில்லை. எனவே வழங்கி வந்த மானியத் தொகையை அரசு நிறுத்துவது பற்றி பிரச்சனை எழவில்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே பாம்கோலா யூனிட்டுக்கு ஒரு ஆண்டுக்கு மானியம் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பாக்கியுள்ள 7 யூனிட்டுகளுக்கும்—நாங்கள் நேரிலே போய் பார்த்தோம், நான் அதனால்தான் இந்தக் கேள்வியைப் போட்டேன்—ஒரு யூனிட்டுக்கு என்ன அடிப்படையிலே மானியம் கொடுக்கப்பட்டதோ அதைப் பரிசீலனை செய்து மற்ற 7 யூனிட்டுகளுக்கும் கொடுக்க அரசு பரிசீலனை செய்யுமா?

1983 பிப்ரவரி 1]

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்; தலைவர் அவர்களே மானியம் கொடுக்கிற பிரச்சினையே எழவில்லை, என்றுதான் கேள்விக்குரிய பதிலாகச் சொன்னேன். ஆகவே மற்ற யூனிட்டு களுக்குக் கொடுக்க வேண்டியதைப் பற்றி பரிசீலிக்க வேண்டிய தில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: தலைவர் அவர்களே, இந்த பாம்கோலா பல்தொழில்கள் சம்பந்தப்பட்ட தொழில் மையங்களை மூலப் பொருட்கள் அதிகமாக கிடைக்கக்கூடிய தொழிலாளர்கள் இருக்கக் கூடிய கன்னிய குமரி மாவட்டத்திலே விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: பாம்கோலா யூனிட்டு கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர் கோவிலில் இயங்கி வருகிறது. மேலும் அந்த யூனிட்டில் அடங்கிய பனைப்பொருட் கள் தயாரிக்க மேலும் ஒரு யூனிட்டை கன்னியாகுமரி மாவட்ட திலே தொடங்குவதற்காக வாரியம் முடிவு செய்து 25 லட்ச ரூபாய் செலவீட்டில் எந்த இடத்தில் அமைக்கலாம் என்று பரி சீலனை செய்து வருகிறது. மார்த்தாண்டம் அல்லது வேறு இடத்தில் அமைக்க வேண்டுமென்று கேட்கிறார்கள், எங்கே வைக்கலாம் என்று பரிசீலனை செய்து பல்மைரா காம்ப்ளக்ஸ் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விதவைகள் அரசுப்பணிகளில் சேர முன்னுரிமை
அளிக்கும் திட்டம்.

*வினா எண் 100—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிர மணியன்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விதவைகள் அரசுப்பணிகளில் சேர முன்னுரிமை அளிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: ஆதரவற்ற விதவை களுக்கு அரசு மருத்துவ நிறுவனங்களில் உள்ள செவிலியர் உதவியாளர்கள், ஆயா, பெருக்குபவர்கள், துப்புரவு பணி யாளர்கள், மருத்துவமனை ஊழியர்கள், சமையல் செய்பவர் கள், சமையல் உதவியாளர்கள் மற்றும் தண்ணீர் பணியாளர் கள் பதவிகளுக்கான பணியிடங்களில் வேலை வாய்ப்பகம் மூலம் நியமனம் செய்வதில் முன்னுரிமை கொடுக்கலாம் என்றும் அப்படி தேவையான அளவு விதவைகள் வேலை வாய்ப்பகம் மூலம் கிடைக்கவில்லையென்றால் நேரடியாக நியமன அதிகாரி பணியில் நியமனம் செய்யலாம் என்றும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்